(இ) திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடுடன் வரைபடங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

(உ) மொத்த ஒதுக்கீடு ரூ. 15 லட்சங்கள். நடப்பாண்டிற்கான செலவு ஒதுக்கீடு ரூ. 10 லட்சங்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வட சென்னையிலிருக்கும் அந்த மருத்துவமனை அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பெரிதும் பயன்படும் மருத்துவ மனையாகும். இந்தப் ப்ரபோசல் வந்து பல ஆண்டு களாகியும், இன்னும் வரைபட நிலையிலேயே இருப்பதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அதை உடனடியாகச் செயல்படுத்த துரிதமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் வந்து பல ஆண்டுகள் ஆகவில்லை. இந்தத் திட்டம் ஏற்கப்பட்டது 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேதான். எனவே 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற அடிப்படையில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

Veterinary Sub-Centres in Kanyakumari.

*106—*Q.* THIRU N. DENNIS : Will the Hon. Minister for Public Health be pleased to state the number of Veterinary Sub-Centres in Kanyakumari district—constituencywise as on date?

HON. THIRU K. ANBAZHAGAN :

(1) Kanyakumari	4
(2) Nagercoil	1
(3) Colachel	3
(4) Padmanabhapuram	2
(5) Thiruvettar	2
(6) Killiyur	3
(7) Vilavancode	3

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இருக்கும் அந்த சப்-சென்டரிலே ஒரு கட்டிடம் மிகவும் மோசமாகப் பழுதடைந்து இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி அங்கு சென்றபொழுது நேரிலே கூறினார்கள். இதுகாறும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பொது விவரம் கேட்டிருப்பது. எனவே இப்பொழுது கேட்ட கேள்வி பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : பல சப்-செண்டர்களில் கட்டடங்கள் இருந்தும் லைவ் ஸ்டாக் அசிஸ்டெண்ட்ஸ் போன்ற பணியாளர்கள் இல்லாதிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட இடங்களில் விரைவாக ஆட்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு ஒரு கேள்வியை விடையாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படி எந்த ஒரு இடமாவது அங்கத்தினருக்குத் தெரியுமா ? அரசாங்கத்திற்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறாரா ? அப்படியானால் அதைப் பற்றிப் பரிசீலித்து முடிவு செய்ய முடியும்.

திரு. ப. முத்துசாமி : என்னுடைய தொகுதியில் மூன்று இடங்களில் கட்டடங்கள் இருந்தும் பணியாட்கள் இல்லை என்பதைப் பற்றி ஏற்கனவே அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனைக் கட்டடங்கள்.

* 107—வினா திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவமனை கட்ட இருந்து, ஒத்திவைக்கப்பட்ட திட்டங்கள் எவை ?

(இ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு வேலை துவக்காமல் இருக்கும் இடங்கள் எவை ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட இருந்தது ஒத்திவைக்கப் பட்டன :—

1. திருச்சிராப்பள்ளி,
2. திருப்பூர்,
3. விக்ரமசிங்கபுரம்,
4. தூத்துக்குடி,
5. திருநெல்வேலி,